# சென்னை சமூக சேவை சங்கம்

# ஆண்டறிக்கை
# 2021 - 2022

சென்னை சமூக சேவை சங்கம்
கோல்பிங் டவர், இரண்டாம் தளம்,
எண். 329, டி.டி.கே. சாலை,
ஆழ்வார்பேட்டை,
சென்னை - 600 018.

## 1. காரிதாஸ் இந்தியா




காரிதாஸ் இந்தியா நிறுவனத்திடமிருந்து ரூ.24,00,000/- மதிப்பீட்டில் 20 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் அரசினர் கீழ்பாக்கம் மருத்துவனைக்கு 12.08.2021 அன்று வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாண்புமிகு ம.சுப்பிரமணியன், தமிழக அரசின் மருத்துவம் - மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்களும், சென்னை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை MV ஜேக்கப் அவர்களும், காரிதாஸ் நிறுவனத்தின் மாநில அலுவலர் முனைவர் ஜான் ஆரோக்கியராஜ் அவர்களும் கலந்து கொண்டனர்.



03.07.2021 அன்று காரிதாஸ் நிறுவனத்திடமிருந்து சென்னை சாந்தோமில் உள்ள ஓய்வு பெற்ற அருட்தந்தையர்கள் தங்கும் வியானி இல்லத்திற்கு ஆக்ஸிஜன் செறிவூட்டிகள்,மேலும் 7 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளையும் ஆரம்பாக்கத்தில் உள்ள மதர் ஜோசப் மருத்துவமனைக்கு சென்னை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் வழங்கினார்.

## ஜீமாட்டோ இந்திய நிறுவனம்

கொரோனா காலத்தில் ஜீமாட்டோ நிறுவனத்தின் வழியாக 850 மாணவர்களுக்கு ஜீலை 06,2021 அன்று உலர் ரேசன் தொகுப்புகள் வழங்கப்பட்டன. அவற்றின் விவரம் (கோதுமை மாவு 5 கிலோ, கொண்டை கடலை 2 கிலோ, உப்பு 1/2 கிலோ )



| வ,எண் | பள்ளியின் பெயர் | தொகுப்பகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புனித பிரான்சிஸ் சேவியர் தொடக்கப்பள்ளி, சின்னமலை | 125 |
| 2 | புனித ஆக்னஸ் நடுநிலைப்பள்ளி, ஜார்ஜ் டவுன் | 300 |
| 3 | புனித தோமையார் பேராலய பள்ளி, சாந்தோம் | 175 |
| 4 | புனித ஜான் நடுநிலைப்பள்ளி, இராயப்பேட்டை | 110 |
| 5 | புனித பிரான்சிஸ் சேவியர் நடுநிலைப்பள்ளி, ஆழ்வார்பேட்டை | 140 |
| | மொத்தம் | 850 |

ஆகஸ்ட் 11, 2021 அன்று ஜீமாட்டோ நிறுவனத்தின் வழியாக 1230 மாணவர்களுக்கு உலர் ரேசன் தொகுப்புகள் வழங்கப்பட்டன . அவற்றின் விவரம் (கோதுமை மாவு 5 கிலோ, கொண்டை கடலை 2 கிலோ, உப்பு 1/2 கிலோ )




| வ,எண் | பள்ளியின் பெயர் | தொகுப்பகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசு உயர்நிலைபள்ளி, பொத்தூர் | 200 |
| 2 | அரசு உயர்நிலைபள்ளி, கரலப்பாக்கம் | 200 |
| 3 | அரசு உயர்நிலைபள்ளி, TNHB ஆவடி | 200 |
| 4 | அரசு உயர்நிலைபள்ளி, ஏகாட்டூர் | 100 |
| 5 | அரசு உயர்நிலைபள்ளி, கசவநல்லாத்தூர் | 100 |
| 6 | அரசு உயர்நிலைபள்ளி, பண்ணூர் | 100 |
| 7 | அரசு உயர்நிலைபள்ளி, கூவம் | 100 |
| 8 | அரசு உயர்நிலைபள்ளி, திருப்பாச்சூர் | 200 |
| 9 | புனித பிரான்சிஸ் சேவியர் நடுநிலைப்பள்ளி, ஆழ்வார்பேட்டை | 30 |
| | மொத்த பயன்பெற்றோர் | 1230 |

## ஜீமாட்டோ சமைத்த உணவ வழங்குதல்

சின்னமலை, கிண்டி மற்றும் பார்க்டவுன் ஆகிய பங்குகளில் உள்ள ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 1500 குடும்பங்களுக்கு 7 நாட்களுக்கு சமைத்த உணவு நேரடியாக வழங்கப்பட்டது.






சென்னை திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள 12 பங்குகளில் வறுமை நிலையில் இருந்த1200 குடுமபங்களுக்கு 29.07.2021 உலர் ரேசன் தொகுப்புகள் திரு பீட்டர் வான்ரூத், நெதர்லாந்து அவர்களால் வழங்கப்பட்டது. தொகுப்பின் விவரம் (அரிசி 5 கிலோ, எண்ணெய் 1/2 லிட்டர், பருப்பு 1/2 கிலோ, சக்கரை 1/2 கிலோ, உப்பு 1/2 கிலோ)




ஜீலை 29, 2021 அன்று 14 பகுதிகளில் 1550 ஏழை குடும்பங்களுக்கு காரிதாஸ் ஜெர்மனி நிறுவனத்தின் நிதி உதவி மூலம் உலர் ரேசன் பொருட்களின் தொகுப்புகள் வழங்கப்பட்டது. (அரிசி 10 கிலோ, எண்ணெய் 1லிட்டர், பருப்பு 1கிலோ, சக்கரை 1கிலோ, உப்பு 1கிலோ, குளியல் சோப்பு 2,துணி சோப்பு 2, கிருமி நாசினி 1, N95 மாஸ்க் 4)

## மருத்துவ உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

காரிதாஸ் ஹாங்காங் நிறுவனத்தின் வழியாக அக்டோபர் 03,2021 அன்று 54 நபர்களுக்கு சாந்தோம் மறைமாவட்ட மேய்ப்பு பணிமையத்தில்மருத்துவ உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் சென்னை மயிலை உயர்மறைமாவட்டத்தின்பேராயரும், சென்னை சமூக சேவை சங்கத்தின் தலைவருமான மேதகு டாக்டர் ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்களும், சென்னை சமூக சேவை இயக்குநர் அருட்தந்தை M V ஜேக்கப்,காரிதாஸ் இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி பால்மூஞ்செலி, டாக்டர் ஜான் ஆரோக்கியராஜ், திரு சிலுவை பங்கேற்றனர்.




தன்னார்வ பணி எவ்வாறு செய்வது எந்தெந்த சூழலில் நாம் முன்னின்று செயல்படுவது என்பதற்கான தன்னம்பிக்கை கொடுக்கும் விதமாக டாக்டர் ராஜன், வழக்கறிஞர் அவர்கள் வழிநடத்தினார். (ஆக்சி மீட்டர் - 1, ஸ்டீமர் - 1, தெர்மோ மீட்டர் - 1, N95 மாஸ்க் - 15, சானிடைசர் - 1)



2. ஜீலை 27, 2021 அன்று தாத்தா பாட்டிகள் தினத்தை மாதர்பாக்கத்தில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் 100 முதியவர்களுக்குவேட்டி,சட்டை, புடவைகள் மற்றும் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.

## 3. மாலைநேர பள்ளி

மாலைநேர பள்ளிகள் நமது மறைமாவட்டத்தில் பல பங்குகளிலும் மகளிர் சுயஉதவிக்குழு இயங்கி வருகின்ற பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றது. இங்கு கல்வி பயிலும் மாணவ மாணவியர்கள், படிக்கும் பள்ளியில் தன்னம்பிக்கையின்றி இருப்பவர்கள் கூச்ச சுபாவம் கொண்டவர்கள் இவர்களை அடையாளம் கண்டு இம்மனநிலையில் இருந்து விடுபட வைப்பது. சுற்றுசூழல் சுத்தமாக வைத்துக்கொள்ள விழிப்புணர்வு கொடுத்தல். இதனால் அவர்களிடம் உற்சாகமும் ஈடுபாடும் அதிகரித்துள்ளது. இடைநில்லா பிள்ளைகள் இல்லை என்கின்ற நிலை உருவாகியுள்ளது. ஏழை குழந்தைகள் தங்கள் தினசரி நாட்களில் சுகாதாரம் இன்றி இருந்தனர். இவர்களை பார்த்து மற்றவர்கள் ஏளனமாக பேசுவது, பார்ப்பது, தரம் குறைவாக நடத்துவது போன்ற வருந்ததக்க செயல்கள் இருந்தது. ஆனால் தற்போது இந்த நிலை மாறி இந்த பிள்ளைகளும் மற்றவர்களைப்போல் நாகரிகமாகவும் இருக்க கற்றுக்கொண்டனர். இவை அனைத்தும் இந்த மாலைநேர வகுப்புகளில் உருவான விளைவுகள்.





மாலை நேர வகுப்புகள் - 47 மையங்களில் ஆண் - 1378, பெண் - 1484, மொத்தம் - 2862 மாணாக்கள் பயிலுகின்றனர்.

## 4. குழந்தைகள் காப்பகம்

மூன்று இடங்களில் குழந்தைகள் காப்பகங்கள் -திருமுல்லைவாயல்- 31 மாணாக்கர்களும், சாஸ்திரி நகர் - 25மாணாக்கர்களும் மற்றும் பழவேற்காடு - 30மாணாக்கர்களும் உள்ளனர்.குழந்தைகள் காப்பகங்களில் கல்வி மேம்படுத்த கலந்தாய்வு நடத்தப்பட்டது, இதில் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.இத்திட்டமானது இந்திய சமூக நல திட்டத்தின் கீழ் ராஜீவ்காந்தி குழந்தைகள் காப்பகமாக இயங்கி வருகிறது.

## 5. ஈரின் திட்டம் (அயல்நாட்டில் இருந்து தாயகம் திரும்பியவர்கள்)

திரு. எலைட் வினோத், திரு. ஹாஜாஸ் உசேன் இவர்கள் சிறு தொழில் செய்வதற்காக விண்ணப்பித்திருந்தார்கள் இவர்களுக்கு காரிதாஸ் இந்தியா நிறுவனம் உதவி செய்ய முன் வந்தது. இவர்களுக்கு தெரிந்த தொழிலை தேர்வு செய்யவும் அவர்களை ஊக்கப்படுத்தவும் சென்னை சமூக சேவை சங்கம் உறுதுணையாக இருந்து வருகிறது.



## 6. டச்சு அகாடெமி

டச்சு அகாடமி மழலையர் மற்றும் துவக்கப்பள்ளி தமிழக அரசு நெறிமுறைகளின் படி நவம்பர் 2021 முதல் பள்ளிகள் திறக்கப்பட்டன. தினசரி 132 மாணவ மாணவிகள் வருகை புரிந்தனர். ஜீமாட்டோ இந்தியா உதவியுடன் 200 மாணாக்களுக்கு உலர் ரேசன் பொருட்கள் மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கப்பட்டது. ஆண்டு தேர்வு தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின் படி மாணவர்களுக்கு ஆண்டு தேர்வு நடத்தப்பட்டது. இத்தேர்வில் 131 மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி பெற்றனர்.

பள்ளிக்கு அரசின் அங்கீகாரம் பெற பல கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் மாவட்ட நகர் ஊரமைப்பு சான்று அனுமதி (DTCP)பெறுவதற்கான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7. வங்கிகளின் ஊக்கத்தொகை

NABFINS, ICICIBank, LIC இந்த நிறுவனங்களின் வழியாக மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடன் உதவி திட்டங்கள் மற்றும் காப்பீடு போன்ற செயல்பாடுகள் சென்னை சமூக சேவை சங்க பணியாளர்கள் வழியாக மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு செயல்படுத்தப்படுகின்றது.



இதில் கிடைக்கும் நிதியை களப்பணியாளர்களுக்கு ஊதியமாக வழங்கப்படுகிறது. NABFINSரூ.5,74,382/-, ICICIBank ரூ.2,75,212/, LICநிறுவனம் ரூ. 66,098/- **மொத்தம் ரூ.9,15,692/**

## 8. வலுவான கூட்டமைப்பு

சென்னை சமூக சேவை சங்கத்தின் வழியாக செயல்படுகின்ற மகளிர் சுயஉதவிக்குழுக்களில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் வருடத்திற்கு ஒருமுறை சந்தா செலுத்தி உறுப்பினர்களாக தங்களை புதுப்பித்து கொள்கின்றனர். இப்புதுப்பித்தல் மூலம் அதிகாரபூர்வ உறுப்பினர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்கின்றனர். இதன் மூலம் இந்த ஆண்டு 2021 அவர்கள் செலுத்திய சந்தா தொகை ரூ.1,95,300/- ஆகும்.

## 9. சமூகம் சார்ந்த வளர்ச்சி நிதி

ரூ.9,70,864/-கல்வி, மருத்துவம், இறப்பு, குடிநீர், உடை, உணவு போன்ற காரணங்களுக்காக ஏழை, எளிய மற்றும் பின்தங்கிய குடும்பங்களுக்கு இந்நிதி உதவி வழங்கப்பட்டது.

## 10. பனித லூயிஸ் கல்வி உதவி

பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மாணவ மாணவியருக்கு கல்லூரி கட்டணம் செலுத்த உதவி 06.09.2021 அன்று வழங்கப்பட்டது.





| வ.எ | பெயர் | பாடப்பிரிவு | தொகை | வ.எ | பெயர் | பாடப்பிரிவு | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஹெலன் ப்ளோரா | II BA English | 12,000 | 14 | பெல்சியா | BCA | 12,000 |
| 2 | மகேஸ்வரி | BSC CS | 12,000 | 15 | ரித்திகா | Journalism | 12,000 |
| 3 | ஷெர்லி | BSC CS | 12,000 | 16 | டேவிட் | Electronic Media | 12,000 |
| 4 | மணிமாறன் | Corporate Secretary | 12,000 | 17 | மஞ்சினேஸ்வரன் | B.Com (A&R) | 12,000 |
| 5 | சக்தி இலக்கியா | Corporate Secretary | 12,000 | 18 | சுரேக் ஜோ | B.Com (A&R) | 12,000 |
| 6 | ரூபன் | Corporate Secretary | 12,000 | 19 | மரியபிரவீன்குமார் | Mathematics | 12,000 |
| 7 | சண்முக வேலு | Corporate Secretary | 12,000 | 20 | ஜஸ்வின் | BSc (Vis.com) | 12,000 |
| 8 | ஷைனி பிரிசில்லா மரியா | Psychology | 12,000 | 21 | எஸ்தர் எலிசபெத் | III SIET | 12,000 |
| 9 | இன்பென்டா கரோலினா | Psychology | 12,000 | 22 | மரிய ஆன்டனி ஜீட் | II Loyola | 12,000 |
| 10 | ஜீட் சாவியோ | Commerce | 12,000 | 23 | ஏஞ்சல் ஷைனி | III Stella | 12,000 |
| 11 | தினேஷ் | BCA | 12,000 | 24 | ரேஷ்மா | II Patrician | 12,000 |
| 12 | பிரவீன் குமார் | BCA | 12,000 | 25 | நிதிஷ் குமார் | III Loyola | 12,000 |
| 13 | ஜோதிகா | BCA | 12,000 | | | | |
| | மொத்தம் | | | | | | 3,00,000 |

## 11. சமூகபணி களஆய்வ

ஒவ்வொரு வருடமும் பல கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் நம் நிறுவனத்தில் 6 மாதம் மற்றும் 1 மாத பயிற்சிக்காக வருகின்றனர். இந்த ஆண்டு லயோலா கல்லூரியில் இருந்து MSW 40 மாணவர்கள் மற்றும் இந்துஸ்தான் பல்கலைகழகம் BSW 35 மாணவர்கள் கள ஆய்வுக்காக, சென்னை சமூக சேவை சங்க பணியிடங்களில், சென்று மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களோடு இணைந்து குழு கூட்டம் நடத்துவது மற்றும் பொது சேவைகள் இவைகளை பார்வையிட்டனர். மேலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு நோட்டு புத்தகம் எழுது பொருள் இவைகளை கொடுத்து உதவினார்கள்.



குழுவாக வந்தவர்கள் விவரம்

**தனிநபர்களாக வந்தவர்கள் விவரம்**

| வ.எண் | கல்லூரி | மாணாக்கர்களின் பெயர் | படிப்பு |
|---|---|---|---|
| 1 | லயோலா கல்லூரி | யேசைய்யா | MSW |
| 2 | லயோலா கல்லூரி | சின்ரல்லா மெல்லியன்கேப் | MSW |
| 3 | லயோலா கல்லூரி | பாலா பிரபாகர் | MSW |
| 4 | குருநானக் கல்லூரி | தியோட் அஜய் | MSW |
| 5 | குருநானக் கல்லூரி | பிரின்ஸ்செல்வா பீட்டர் | MSW |
| 6 | ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி | பவுலின் பிரேமா | BSW |
| 7 | ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி | எஸ்தர் சூசைன் தாமஸ் | BSW |
| 8 | ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி | ரஜினி | BSW |

## 12. இருளர் இன குழந்தைகளுக்கு உதவி வழங்குதல்



வசதி உள்ள குடும்ப உறுப்பினர்கள் ஒன்று கூடி விழா கொண்டாடி மகிழ்வது வழக்கம். ஆனால் ஊருக்கு ஒதுக்குபுறமாகவும், காடுகளை சார்ந்து வாழும் இருளர் சமூக மக்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இதனை கருத்தில் கொண்டு இவர்களுக்கு தீபாவளி திருநாளன்று வசந்தம் நகர், பூண்டி ஒன்றியம் சீனிகுப்பம் ஊத்துக்கோட்டை பகுதியில், நந்தியம் பாக்கம் மீஞ்சூர், மற்றும் புழல் ஒன்றியம் இந்த பகுதிகளில் உள்ள இருளர் சமூக குழந்தைகளுக்கு புத்தாடை மற்றும் இனிப்புகளை சென்னை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை MV ஜேக்கப் அவர்கள் வழங்கினார்கள்.

**இதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ,எண் | இடம் | தேதி | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | வசந்தம் நகர், பூண்டி | 26.10.2021 | 17 | 20 | 37 |
| 2 | செல்லியம்மன் நகர், ஊத்துக்கோட்டை | 26.10.2021 | 13 | 19 | 32 |
| 3 | சீனிக்குப்பம், ஊத்துக்கோட்டை | 26.10.2021 | 13 | 17 | 30 |
| 4 | எல்லம்மன்பேட்டை, ஊத்துக்கோட்டை | 26.10.2021 | 16 | 12 | 28 |
| 5 | சடையன் குப்பம், புழல் | 27.10.2021 | 12 | 18 | 30 |
| 6 | நந்தியம்பாக்கம், மீஞ்சூர் | 27.10.2021 | 42 | 30 | 72 |
| | மொத்தம் | | 113 | 116 | 229 |

## 13. காரிதாஸ் இந்தியா, கிந்தர் மிஷன் ஒர்க், பீட்டர் வான்ரத் நிறுவனங்களின் வழியாகஅவசர கால நிவாரண உதவி வழங்குதல்



தினசரி வேலைக்கு செல்லும் கூலி தொழிலாளர்கள் தொடர் மழையின் காரணமாக வேலைகளுக்கு செல்ல முடியாமல் போயிற்று.இவ்வேளையில் சென்னை சமூக சேவை சங்கம் காரிதாஸ் நிறுவனம் இணைந்து உணவு பொருட்கள் 2000 குடும்பங்களுக்கு நவம்பர் 20-ம் தேதி 2021 அன்று சென்னை மயிலை உயர்மறைமாவட்ட மேதகு பேராயர் டாக்டர் ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சென்னை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை MV ஜேக்கப், அருட்தந்தை G J அந்தோணி சாமி, காரிதாஸ் இந்தியா நிறுவனத்தின் தமிழக மாநில அலுவலர், முனைவர் ஜான் ஆரோக்கிய ராஜ் அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

| வ,எ | பங்கு | தொகுப்ப | வ,எண் | பங்கு | தொகுப்ப |
|---|---|---|---|---|---|
| 1 | எண்ணூர் | 100 | 29 | கனகமாசத்திரம் | 50 |
| 2 | எர்ணாவூர் | 60 | 30 | ராயப்பேட்டை | 100 |
| 3 | திருவொற்றியூர் | 75 | 31 | புதுப்பேட்டை | 100 |
| 4 | பாரதியார் நகர் | 100 | 32 | வேப்பேரி | 200 |
| 5 | தண்டையார்பேட்டை | 300 | 33 | சிந்தாதிரிபேட்டை | 100 |
| 6 | காசிமேடு | 300 | 34 | அம்பத்தூர் | 100 |
| 7 | வியாசர்பாடி | 150 | 35 | அசோக் நகர் | 50 |
| 8 | பேசின் பிரிட்ஜ் | 200 | 36 | கொருக்கு பேட்டை | 50 |
| 9 | தி.நகர் | 80 | 37 | பூந்தமல்லி | 100 |
| 10 | நெசப்பாக்கம் | 50 | 38 | திருவள்ளூர் | 100 |
| 11 | மதுரவாயல் | 100 | 39 | மணவாளநகர் | 50 |
| 12 | வளசரவாக்கம் | 85 | 40 | பார்க்டவுன் | 100 |
| 13 | வேளச்சேரி | 250 | 41 | மணலி புதுநகர் | 100 |
| 14 | தரமணி | 150 | 42 | சேவா மிஷினரி கான்வென்ட் | 150 |
| 15 | திருவாலங்காடு | 100 | 43 | பழைய மணலி | 100 |
| 16 | கும்மிடிபூண்டி | 100 | 44 | புழல் | 200 |
| 17 | தேவி நகர் | 100 | 45 | தணிக்காசலம் நகர் | 50 |
| 18 | ரோசா நகரம் | 150 | 46 | செம்பியம் | 100 |
| 19 | பெரியபாளையம் | 100 | 47 | வில்லிவாக்கம் | 200 |
| 20 | காணியம்பாக்கம் | 100 | 48 | எருக்கஞ்சேரி | 100 |
| 21 | ரெட்ஹில்ஸ் | 100 | 49 | எழும்பூர் | 250 |
| 22 | அன்னனூர் | 100 | 50 | ஜார்ஜ் டவுன் | 200 |
| 23 | கரிக்கலவாக்கம் | 50 | 51 | தூசையப்பர் ஆலயம், வேப்பேரி | 100 |
| 24 | கடம்பத்தூர் | 100 | 52 | ஆர்.எஸ் நகர், திருவொற்றியூர் | 100 |
| 25 | திருபாச்சூர் | 50 | 53 | அடையார் | 100 |
| 26 | ஊத்துக்கோட்டை | 150 | 54 | அபிராமிபுரம் | 150 |
| 27 | திருத்தணி | 50 | 55 | ஆர்.ஏ.புரம் | 300 |
| 28 | K.G.கண்டிகை | 50 | 56 | சின்னமலை | 200 |
| | மொத்தம் | | | | 6800 |

## 14.ஏழைகளுக்கு உதவுதல்

சென்னை சமூக சேவை சங்கம் இந்த ஆண்டும் டிசம்பர் மாதம் ஏழை எளியவர்களுக்கு உடை கொடுத்து வருகின்றது. இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 2021-ல் பங்குகளுக்கு கொடுக்கப்பட்டது.



| வ.எண் | பகுதி | லுங்கி | வேட்டி | போர்வை | படவை |
|---|---|---|---|---|---|
| 1 | அல்போன்சாபுரம் | 0 | 0 | 0 | 50 |
| 2 | பான்ரவேடு | 0 | 0 | 0 | 50 |
| 3 | திருவாலங்காடு | 10 | 0 | 10 | 25 |
| 4 | திருத்தணி | 0 | 0 | 0 | 50 |
| 5 | கனகமாச்சத்திரம் | 0 | 0 | 20 | 30 |
| 6 | தெக்களூர் | 0 | 0 | 40 | 10 |
| 7 | தொழுதாவூர் | 0 | 0 | 50 | 0 |
| 8 | ஆரம்பாக்கம் | 10 | 0 | 10 | 30 |
| 9 | காணியம்பாக்கம் | 0 | 0 | 20 | 30 |
| 10 | பெரியபாளையம் | 0 | 0 | 0 | 50 |
| 11 | பழவேற்காடு | 20 | 0 | 10 | 20 |
| 12 | ஊத்துக்கோட்டை | 0 | 0 | 20 | 30 |
| 13 | கும்மிடிபூண்டி | 10 | 0 | 20 | 20 |
| 14 | மீஞ்சூர் | 0 | 0 | 50 | 0 |
| 15 | பொன்னேரி | 5 | 0 | 15 | 30 |
| 16 | ரோசாநகரம் | 0 | 0 | 0 | 50 |
| 17 | காந்திபேட்டை | 0 | 0 | 0 | 50 |
| 18 | கல்லம்பேடு | 0 | 0 | 50 | 0 |
| 19 | மணவாளநகர் | 10 | 0 | 10 | 30 |
| 20 | பேரம்பாக்கம் | 0 | 10 | 10 | 30 |
| 21 | திருவள்ளூர் | 10 | 0 | 30 | 10 |
| 22 | கடம்பத்தூர் | 0 | 10 | 0 | 40 |
| 23 | கீழச்சேரி | 0 | 10 | 10 | 30 |
| 24 | பண்ணூரர் | 0 | 0 | 0 | 50 |
| 25 | பிஞ்சிவாக்கம் | 10 | 10 | 0 | 30 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 | திருப்பாச்சூர் | 25 | 10 | 0 | 15 |
| 27 | காந்திநகர் | 25 | 0 | 0 | 25 |
| 28 | வளசரவாக்கம் | 10 | 0 | 30 | 10 |
| 29 | ஆவடி அண்ணாநகர் | 10 | 0 | 0 | 40 |
| 30 | ஜார்ஜ் டவுன் | 25 | 0 | 0 | 25 |
| 31 | பழைய மணலி | 10 | 0 | 10 | 30 |
| 32 | சத்தியமூர்த்தி நகர் | 20 | 0 | 10 | 20 |
| 33 | சிட்கோ நகர் | 0 | 0 | 0 | 75 |
| 34 | G.K.M காலனி | 15 | 0 | 10 | 25 |
| 35 | தென்றல் நகர் | 10 | 0 | 20 | 20 |
| 36 | சாஸ்திரிநகர் | 0 | 0 | 10 | 30 |
| 37 | கரிக்களவாக்கம் | 10 | 0 | 10 | 10 |
| 38 | புழல் | 0 | 0 | 0 | 30 |
| 39 | இலஷ்மிபுரம் | 0 | 0 | 10 | 15 |
| 40 | M A நகர் | 0 | 0 | 10 | 20 |
| 41 | திருமுல்லைவாயல் | 0 | 0 | 0 | 30 |
| 42 | அசிசி நகர் | 10 | 0 | 0 | 20 |
| 43 | மோரை | 10 | 0 | 10 | 25 |
| 44 | புதுப்பேட்டை | 0 | 0 | 0 | 30 |
| 45 | காமராஜர் நகர் | 0 | 0 | 10 | 30 |
| 46 | சாந்தோம் | 50 | 0 | 0 | 200 |
| 47 | SC/ST கமிஷன் | 0 | 0 | 0 | 100 |
| 48 | மேய்ப்பு பணி மையம் | 0 | 0 | 0 | 50 |
| 49 | குரு மாணவர் மடம் | 20 | 10 | 20 | 0 |
| 50 | இலுப்பூர் | 0 | 25 | 25 | 0 |
| 51 | பட்ரந்தாங்கல் | 0 | 25 | 25 | 0 |
| 52 | நெடுமரம் | 0 | 50 | 50 | 0 |
| 53 | கிரைஸ்ட் காலேஜ் | 0 | 0 | 0 | 25 |
| 54 | நரிகுறவர் குடும்பம் | 20 | 0 | 10 | 15 |
| 55 | சிறுவர்கள் 50 | 0 | 0 | 0 | 0 |
| 56 | அலுவலக உபயோகத்திற்கு | 50 | 0 | 50 | 200 |
| | மொத்தம் | 405 | 150 | 705 | 1860 |



சென்னை சமூக சேவை சங்க மையத்தில் 18.12.2021 அன்று மையப்பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்களோடு இணைந்து கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது.

## 15. மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மற்றும் பெண்கள் கூட்டமைப்ப

சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களை உள்ளடக்கிய பல கிராமங்களில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் 2535 குழுக்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு தனி நபரும் தங்கள் வருவாயில் ஒரு பங்கை சேமிக்கவும் செலவினத்தை குறைக்கவும் கற்றுக் கொண்டுள்ளனர். பிறரிடம் கந்து வட்டி, கூட்டு வட்டி வாங்குவதை நிறுத்தி உள்ளனர். தேவையில் இருப்போர்க்கு சேமிப்பில் இருந்தும் வங்கியில் இருந்தும் கடன் பெற்றுக் கொள்கின்றனர்.

குழுக்களின் விவரம்

| வ.எ | ஒன்றியம் | குழுக்கள் | உறுப்பினர்கள் | வ.எ | ஒன்றியம் | குழுக்கள் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அன்பியம் | 57 | 936 | 11 | மீஞ்சூர் TP | 23 | 345 |
| 2 | கோல்பிங் | 87 | 1267 | 12 | கத்திவாக்கம் | 26 | 390 |
| 3 | வில்லிவாக்கம் | 505 | 6060 | 13 | சோழவரம் | 29 | 348 |
| 4 | ஆவடி | 211 | 2532 | 14 | ஊத்துக்கோட்டை | 70 | 840 |
| 5 | கடம்பத்தூர் | 331 | 3972 | 15 | எல்லாபுரம் | 259 | 3108 |
| 6 | பூண்டி | 70 | 840 | 16 | பழவேற்காடு | 149 | 1758 |
| 7 | திருத்தணி | 25 | 300 | 17 | கும்மிடிபூண்டி | 254 | 3048 |
| 8 | திருவாலங்காடு | 35 | 420 | 18 | மீஞ்சூர் CBR | 52 | 624 |
| 9 | புழல் | 87 | 1305 | 19 | UDRR | 19 | 240 |
| 10 | மீஞ்சூர் | 246 | 3444 | | மொத்தம் | 2535 | 31807 |

**நேரடிக்கடன் விவரம்**



வாழ்வாதாரத்தை பெருக்குவதற்கும், புதிய தொழிலை தொடங்குவதற்கும் மற்றும் ஏற்கனவே செய்து வருகின்ற தொழிலை விரிவுபடுத்துவதற்கும் வங்கிகளிலிருந்து நேரடி கடன் பெறுகின்றனர்.

ஐசிஐசிஐ வங்கியில் 41 குழுக்களுக்கு ரூ. 1,69,66,000/
இந்தியன் வங்கியில் 71 குழுக்களுக்கு ரூ. 6,10,28,000/
நா.ஃபின்ஸ் வங்கியில் 79 குழுக்களுக்கு ரூ. 2,80,65,000/
கூட்டுறவு வங்கியில் 2 குழுக்களுக்கு ரூ. 15,00,000/
இந்த வங்கிகளில் 193 குழுக்களில் உள்ள 2625 உறுப்பினர்கள் ரூ.10,75,59,000/ கடனுதவியாக பெற்றனர்.

## 16. பொங்கல் விழா



தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை கடம்பத்தூர் ஒன்றியம் புதுப்பட்டு கிராமத்தில், 21.01.2022 அன்று சென்னை திருவள்ளூர் மாவட்ட பெண்கள் கூட்டமைப்பு மற்றும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் ஒன்றியத் தலைவிகள் இணைந்து பொங்கல் வைத்தும் விளையாட்டுப்போட்டிகள், கலைநிகழ்ச்சிகளையும் நடத்தினார்கள். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இவ்விழாவில் ஊராட்சி மன்றத் தலைவர், சென்னை சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை MV ஜேக்கப் அவர்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள்.

## 17. அகில உலக பெண்கள் தினவிழா

சென்னை சமூக சேவை சங்கத்தின் சார்பாக சாந்தோம்





மறைமாவட்ட மேய்ப்பு பணிமையத்தில் 12.03.2022 அன்று “நிலையான நாளைக்காக இன்றைய பாலின

சமத்துவம் பாரபட்சத்தை தகர்த்தெறி" என்றதலைப்பில் பெண்கள் தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சென்னை சமூக சேவை சங்கத்தின் தலைவர் மேதகு போராயர் முனைவர் ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்கள், முனைவர் சுல்தான்அகமது இஸ்மாயில், மண்ணுயிரியல் &சுற்றுசூழல் விஞ்ஞானி, திருமதி பிருந்தா தேவி I.A.S., தோட்டக்கலை, மலைப்பயிர்கள் துறை, முனைவர் ஜான் ஆரோக்கியராஜ், காரிதாஸ் இந்தியா நிறுவனத்தின் தமிழக மாநில அலுவலர், திருமதி ஆகினேஸ் ரோஷினி சமூக ஆர்வலர், அருட்தந்தை சகாயராஜ், தமிழக ஆயர்பேரவை செயலர், அருட்தந்தை ஜோசப் ஜெயகுமார்இயக்குநர் மேய்ப்பு பணி மையம், அருட்தந்தை MV ஜேக்கப் அவர்கள், இயக்குநர் சென்னை சமூக சேவை சங்கம்இவர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வாழ்வாதாரத்திற்கான கடன் உதவி திட்டத்தில் ரூ.2,02,00,000/ வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியை பெண்கள் கூட்டமைப்பின் பொறுப்பாளர்களே ஒருங்கிணைத்து நடத்தினார்கள். பெண்கள் சுயஉதவிக்குழுக்களை சேர்ந்த 1200 உறுப்பினர்கள் கலந்துக் கொண்டனர்.

### மாவட்ட பெண்கள் கூட்டமைப்ப கூட்டம்

சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்ட பெண்கள் கூட்டமைப்பு கூட்டம் சென்னை சமூக சேவை சங்க பயிற்சி மையத்தில் 17.08.2021 அன்று 14 பகுதிகளில் உள்ள மாவட்ட பெண்கள் கூட்டமைப்பை சார்ந்த பொறுப்பாளர்களுக்குநடத்தப்பட்டது. இதில் அனைத்து பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

### பழல் ஒன்றியம் மகளிர் தினம்

புழல், மீஞ்சூர், மற்றும் சோழாவரம் பகுதிகளை சார்ந்த களப்பணியாளர்கள் 10.03.2022 அன்று மணலி புதுநகர் பகுதியில் மகளிர் தினம் நடத்தினர். இந்த மகளிர் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக திரு சுதர்சன் MLA மாதவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்அவர்கள், பேராசிரியர் முனைவர் பர்வீன் சுல்தானா, SIET கல்லூரி பேராசிரியர் அவர்கள், அருட்தந்தை MV ஜேக்கப், சென்னை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அவர்கள் மற்றும் மணலி புதுநகர் இந்தியன் வங்கி மேலாளர் அவர்களும் கலந்து கொண்டனர்.இந்நிகழ்வின் போது 7 மகளிர் சுயஉதவிக்குழுக்களை சார்ந்த




உறுப்பினர்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கடனுதவியாக மணலி புதுநகர் பகுதியில் உள்ள இந்தியன் வங்கி மூலம் ரூ.42,00,000/ வழங்கப்பட்டது.

### 19. தவக்காலநிகழ்வ

நமது உயர்மறைமாவட்டத்தில் தவகாலத்தில் பசி பிணிக்காக நன்கொடைபெறப்படும் தொகையின் ஒரு பகுதி நமது நிறுவனத்தின் சமூக வளர்ச்சி திட்டத்திற்காக வழங்கப்படுகிறது. இதற்காக 27.03.2022 அன்று சென்னை மயிலை உயர்மறைமாவட்ட பேராயர் மேதகு டாக்டர் ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்கள் மற்றும் சென்னை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை MV ஜேக்கப் அவர்களும் இணைந்து சாந்தோம் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இத்திட்டத்தினை தொடங்கி வைத்தனர்.




## 20. மருத்துவ முகாம்

சென்னை சமூக சேவை சங்கம் மற்றும் பெண்கள் கூட்டமைப்பின் சார்பாக 18 இடங்களில் தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டது. இதில் 2856 நபர்கள் தடுப்பூசி எடுத்துகொண்டனர் மேலும் ஒன்றிய / கிராம கூட்டமைப்பு கூட்டங்கள் வாயிலாக கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 09.07.2021 அன்று மாற்றுத்திறனாளிகளுக்கு கொரோனா விழிப்புணர்வு மற்றும் தடுப்பூசி முகாம் பழவேற்காட்டில் நடத்தப்பட்டது.



MN கண் மருத்துவமனை வழியாக 10 கண் பரிசோதனை முகாம்கள்நடத்தப்பட்டது இதன் மூலம் கண் பரிசோதனை 1928 நபர்களுக்கும், கண் புரை அறுவை சிகிச்சை 198 நபர்களுக்கும், 243 நபர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடியும் வழங்கப்பட்டுள்ளது.

## 21. வேலை வாய்ப்ப முகாம் இடங்கள்

சென்னை சமூக சேவை சங்கம் மற்றும் மேஜிக் பஸ் இணைந்து நடத்தியது. இந்த வேலை வாய்ப்பு முகாமில் 20-க்கும் மேற்பட்ட கம்பெனிகள் பங்கேற்றன. கோடம்பாக்கம் பாத்திமா அன்னை ஆலயத்தின் பங்குதந்தை அருட்பணி இக்னேஷியஸ் தாமஸ் அவர்களின் தலைமையில் 13.11.2021 அன்று கோடம்பாக்கம் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது - 352 நபர்கள் பங்கேற்றதில் - 156 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்றனர். மற்றும் கிண்டி குழந்தை யேசு ஆலயத்தின் பங்குதந்தை அருட்பணி C.C,அம்புரோஸ் அவர்களின் தலைமையில் 26.02.2022 அன்று கிண்டி குழந்தை யேசு மெட்ரிக்குலேசன் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது - 252 நபர்கள் பங்கேற்றதில் - 60 நபர்கள் வேலை வாய்ப்பு பெற்றனர்.



## 22. மழைகால நிவாரணம்



06.12.2022 அன்று கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் 600 ஏழை குடும்பங்களுக்கு மழைகால நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் சென்னை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை MV ஜேக்கப் அவர்கள், ஊராட்சி மன்றத்தலைவர்கள்திரு மூர்த்தி அவர்கள், திரு லாரன்ஸ் அவர்கள், ஒன்றியத்தின் கவுன்சிலர் திரு சிட்டிபாபு அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 23. கோல்பிங் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள்

கோல்பிங் குழுக்களின் செயல்பாடுகள் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 58 பங்குதளங்களில் 87 கோல்பிங் குழுகளில் 1267 உறுப்பினர்கள் இணைந்து ஆன்மீகம், பொருளாதாரம் மற்றும் சமூகசேவை செயல்பாடுகளை உள்ளடக்கி செய்யப்பட்டு வருகின்றனர். நகர்புற மற்றும் கிராமபுறங்களில் சிறு தொழில் செய்து வருவாய் ஈட்டி தன்னுடைய குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர். இதனால் தங்களுடைய குடும்பத்தில் மகிழ்ச்சி காண முடிகிறது.

## வருவாய் பெருக்கு திட்டம் / IIGP

ஒவ்வொரு ஆண்டும் கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்த உதவி கோல்பிங் உறுப்பினர்களின் தனி நபர்கள் சிறு தொழில் செய்து வருவாய் பெருக்கி தங்களது குடும்ப பொருளாதார நிலையை மேம்படுத்தி வருவதற்காக (ஆடு,மாடு, கோழி வளர்ப்பு, பெட்டி கடை, தையல்கடை, அழகு கலைநிலையம், பால்வியாபாரம், மளிகை கடை) போன்ற தொழில்கள் செய்வதற்கு இந்த திட்டம் அளிக்கப்படுகிறது.



## கூட்டு வருவாய் பெருக்கு திட்டம் (CIGP)

கூட்டாக தொழில் செய்வதற்கும் வருமானம் ஈட்டுகின்ற தொழிலையும், இடத்தையும் தேர்வு செய்து வாடிக்கையாளர்களுக்கு மொத்தமாகவும் அல்லது சில்லரையாகவும் விற்பனை செய்து நிரந்தர வருவாய் பெருக்குவதற்கான பயிற்சிகள் கொடுக்கப்பட்டு இப்பயிற்சியின் வாயிலாக கூட்டு தொழிலை செய்வதற்கு முன் வருகின்ற குழுக்களை தேர்வு செய்து இந்த கூட்டு வருவாய் பெருக்கு திட்டத்திற்கு ஆவடி அண்ணாநகர் கோல்பிங் குழுவிற்கு மளிகை கடை வியாபாரம் செய்ய ரூ. 2,00,000/- உதவி வழங்கப்பட்டது.



## கறவை மாடு வளர்ப்ப திட்டம் / MAP

இன்றைய சமூக கால மாற்றங்களில் பால் மற்றும் பால் பொருள்கள் இன்றியமையாத ஒன்று இதனை மெய்ப்பிக்கும் வகையில் கறவை மாடு வளர்ப்பு கோல்பிங் அங்கத்தினர்களுக்கு ஒரு வரபிரசாதம். இதனை வளர்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் கால்நடை வளர்ப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில் விருப்பம் மற்றும் அதற்கான வாய்ப்ப ,கள் உள்ள அங்கத்தினர்களுக்கு இ__த்திட்டம் அளிக்கப்பட்டது. தங்களின் குடும்ப வருமானம் பெருக்கும் விதமாக இந்த கோல்பிங் கறவை மாடு திட்டம் 15 உறுப்பினர்களுக்கு ரூ. 1,90,000/- வழங்கப்பட்டது.



## தொழில் கல்வி பயிற்சி திட்டம் / VTP

ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களை சார்ந்த பெரும்பாலான மாணவ மாணவியர் 10,12-ம் வகுப்பிற்கு மேல் உயர்கல்வி பயில வாய்ப்புகிட்டுவதில்லை இத்தகையவர்களுக்கு தொழில் பயிற்சி பெற்று அவர்கள் சொந்தமாக தொழில் தொடங்குவதற்கும் தொழில்நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுவதற்க்கு, இந்த தொழில் கல்வி பயிற்சி திட்டத்தில் 6 கோல்பிங்குழு உறுப்பினர்களுக்கு ரூ. 60,000/- உதவி வழங்கப்பட்டது.





## வீடு கட்டும் திட்டம் / HSP

மனிதன் வசிப்பதற்கு வீடு அவசியமாகின்றது. மழை வெள்ளம், தீ போன்ற இயற்கை சீற்ற காலங்களில் குடும்பங்களை பாதுகாப்பதற்கு நல்ல வீடு அவசியம். ஏழை எளியவர்கள் ஓலை வீடுகள் மற்றும் பழமையான வீடுகளில் இருந்து விடுபட்டு நல்ல காங்கிரீட், அல்லது ஓடு வீடு அமைத்துக் கொள்ளவும் சமூகத்தில் மாற்றம் மற்றும் அந்தஸ்து உயரவும் இத்திட்டம் கைகொடுக்கின்றது. இத்திட்டத்தில் கோல்பிங் இந்திய தேசிய அலுவலகத்தின் வழியாக ரூ. 40,000/- கடனாகவும், ரூ.10,000/- மானியமாகவும் 4 கோல்பிங் குழு உறுப்பினர்களுக்கு ரூ. 2,00,000/- வழங்கபட்டது. அரசு திட்ட உதவிகள் மற்றும் உறுப்பினர்களின் பங்களிப்போடு இத்திட்டம் நிறைவேற்றப்படுகின்றது.



## பயிற்சிகள்

கோல்பிங் குழுக்கள் பல பங்குகளில் செயல்பட்டு வருகின்றது. அவற்றில் குறிப்பாக 7 கிராமங்களை தேர்வு செய்து அவர்களுக்கு தலைமை பண்பு, குழுக்களை வழிநடத்துதல், பிரச்சனைகளை கையாளுதல், அரசு மற்றும் பிற நிறுவனங்களுடன், வங்கிகள் இவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வது சுற்றுபுற சுகாதாரம் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாப்பது, குறுங்காடு வளர்த்தல் இந்த தலைப்பின் கீழ் VLKF, VDC, CLKF, DLKF கோல்பிங் உறுப்பினர்கள் பொறுப்பாளர்களுக்கு 30 நாட்கள் வெவ்வேறு தலைப்பில் பயிற்சிகள் அளிக்கப்பட்டது. 976 நபர்கள் பங்கேற்று பயன்பெற்றனர்.

 

**கோல்பிங் உறுப்பினர்கள் இறப்ப நிவாரண நிதி**

கோல்பிங் உறுப்பினர்கள் 2 நபர்கள் இயற்கை எய்தினர் 1.சங்கீதா, தோக்கமூர் ரூ.5000/ , 2.வெங்கடேசன், காந்திபேட்டை ரூ.5000/ இவர்களின் இறப்பிற்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

**கோல்பிங் குழுக்களுக்கு நேரடி கடன்**

இந்தியன் வங்கி மைக்ரோசேட் கிளை - 6 குழுக்கள் - ரூ. 61,00,000/-

ஐசிஜசிஜ வங்கி - 3 குழுக்கள் - ரூ. 16,50,000/- இரண்டு வங்கிகளில் ரூ. 77,50,000/- நேரடி கடன் பெற்று தங்களின் திறனுக்கு ஏற்ப சிறு தொழில் செய்து அதில் கிடைக்கும் வருமானத்தில் மாதம் தவறாமல் கடன் திருப்பம் செய்வது மீதி தொகையை தங்களின் வாழ்வாதாரத்திற்கான தேவையை பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

## 24. அன்பிய மகளிர் சுயஉதவிக்குழுக்கள்

சென்னை மயிலை உயர்மறைமாவட்டத்தில் 10 பங்குகளில் 54 மகளிர் சுயஉதவிக்குழுக்களை உருவாக்கி அவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி குழுக்களை வழிநடத்துவது பதிவேடுகள் பராமரிப்பது போன்ற பயிற்சிகளும் அளிக்கப்பட்டு சேமிப்புமற்றும் கடன் உதவி பெறும் வழிமுறைகளையும் உருவாக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்று வாழ்வாதாரத்திற்கான சிறு தொழில் செய்து வருமானம் ஈட்டி வருகின்றனர். இதற்காக ஊக்குநர், பிரதிநிதிகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தியன் வங்கி மைக்ரோசேட் கிளை - 9 குழுக்கள் - ரூ. 46,50,000/-, ஐசிஜசிஜ வங்கி - 22 குழுக்கள் - ரூ. 66,00,000/- இரண்டு வங்கிகளில் ரூ. 1,12,50,000/- நேரடி கடன் பெற்றுள்ளனர்.



## 25. திறன் வளர்ப்ப பயிற்சி



05.08.2021 அன்று மீஞ்சூர் பகுதியில் தையல் பயிற்சி வகுப்புகள் மூன்று மாத காலம் நடைபெற்றது. பயிற்சியின் முடிவில் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## 26. பணியாளர்களுக்கு பத்தாக்க பயிற்சி



ஜீலை மாதத்தில் 22 மற்றும் 23 ஆகிய நாட்களில் காரிதாஸ் இந்தியாவின் திரு ஜான் ஆரோக்கியராஜ் அவர்களால் MSSS பணியாளர்களுக்கு நிறுவன எதிர்கால திட்டம் பற்றிய பயிற்சி நடைபெற்றது. நவம்பர் மாதத்தில் 22 மற்றும் 23 ஆகிய நாட்களில் சேவா மிஷினரி அருட்சகோதரி அருள்செல்வி அவர்களால் MSSS பணியாளர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி நடத்தப்பட்டது.

## 27. குடும்ப பாதுகாப்ப திட்டம் (SAFP)



சமூகத்தில் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளவர்களுக்குதனிநபர் வருவாய் பெருக்குவதற்காக பல்வேறு தொழில்களை தொடங்குவதற்கு 204 குடும்பங்களுக்கு ரூ.34,58,067/ நிதிஉதவியாக வழங்கப்பட்டது. இந்த ஆண்டு 2021 டிசம்பர் மாதம், 216 நபர்களுக்கு உதவி செய்கின்ற அனைத்து உபகாரிகளுக்கும் பயனாளிகள் நன்றி தெரிவிக்கும்விதமாக கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை கடிதத்தின் மூலம் தெரிவித்துக்கொண்டனர்.

குடும்ப பாதுகாப்பு திட்டத்தில் 7 ஒன்றியங்களில் உள்ள 66 குடும்பங்கள் கடந்த 6 ஆண்டுகளாக உதவி பெற்று வந்தனர். இந்த 6 ஆண்டுகளில் தங்கள் குடும்பங்களில் ஓரளவிற்கு தங்களின் பொருளாதார நிலையை உயர்த்தப்பட்டுள்ளனர் என்பதை அந்த

உபகாரிகளுக்கு விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக இந்த உதவி செய்தவர்கள் 6 ஆண்டிற்கு பிறகு தங்கள் உதவியை நிறுத்திக்கொண்டனர்.

## 28.எழுவோம் இயக்கம்

புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 10.02.2022 அன்று எலந்தனூரில் சென்னை சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை MV ஜேக்கப் அவர்கள் மற்றும் அடையார் கேன்சர் மருத்துவமனை மையத்தின் மருத்துவர் திருமதி பிரமிளா அவர்களும் துவங்கி வைத்தார்கள். புற்றுநோய் பாதுகாப்பு, நோய் தடுப்பு, வாழ்க்கை முறை மாற்றம் மற்றும் உணவு கலாச்சாரம் மார்பக, வாய், கருப்பை புற்றுநோய் தடுப்பு முன்னெச்சரிக்கை பற்றிய விரிவான விளக்கங்களை மருத்துவர் திருமதி பிரமிளா அவர்கள் வழங்கினார்கள். அதன் பின் 10 இடங்களில் 523 நபர்களுக்கு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டது. இம்முகாமில் பங்கேற்ற21 பெண்களுக்கு நோய் அறிகுறி கண்டறியப்பட்டது.



## 29. டெங்கு விழிப்பணர்வ

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டி ஒன்றியத்தில் 27.07.2021 அன்று டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 167 நபர்களுக்கு போர்வை, உடை மற்றும் உணவு சென்னை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருடதந்தை MV ஜேக்கப் அவர்கள் வழங்கினார்கள். 22,23 நவம்பர் 2021 தேதிகளில் தொலைநோக்கு பார்வை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சமூகத்தில் உள்ள இளைஞர்களை தன்னார்வ தொண்டர்களாக சேர்த்துக்கொண்டு ஊராட்சி மன்ற தலைவர்களுடன் இணைந்து டெங்கு விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்வது எனவும் அறிவுறுத்தப்பட்டது. 43 தன்னார்வ தொண்டர்கள் பங்கேற்று பயன்பெற்றனர். கிராமப்புறங்களில் உள்ள தகுதி உள்ள 700 குழந்தைகளுக்கு வாஷ்கிட் கொடுத்து அதை எவ்வாறு சுகாதாரமான முறையில் பயன்படுத்தவேண்டும் என்பதை விளக்கப்பட்டது. இந்த உதவி கிராமபுறங்களில் பின்தங்கிய மற்றும் பழங்குடி சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்டது.

## 30. பலம் பெயர்ந்தோர் திட்டம்

தமிழக சமூகபணி மையம் (Tassos) மூலம் புலம் பெயர்ந்தோர்க்கான திட்டம் சென்னை சமூக சேவை சங்கத்தில் துவங்கப்பட்டது. முதல் கட்டமாக அவர்களின் தரவுகள் குடும்ப கணக்கெடுப்பு செய்யப்பட்டது. 40 புலம் பெயர்ந்த குடும்பங்களுக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கள அளவில் 5 கிராமங்களில் செயல்படுத்த முடிவவெடுக்கப்பட்டது. 1. கொளத்தூர், 2. காமராஜநகர் ஆவடி, 3. பி.வி.புரம் ஆவடி, 4. புதிய கன்னியம்மன்நகர் ஆவடி, 5. குமரன் நகர் ஆவடி ஆகிய இடங்களாகும்.



**மாநில மற்றும் மத்திய அரசின் திறன் வளர்ப்ப திட்டத்தில் இணைத்தல்**

23.04.2021 அன்று ஆவடியில் புலம் பெயர்ந்தோர்க்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டத்தை சென்னை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை MV ஜேக்கப் அவர்கள் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தில் 20 வளர் இளம் பெண்கள் தையல் பயிற்சியில் சேர்க்கப்பட்டனர்.

சேவை இணைப்பு திட்டங்களை இடம் பெயர்ந்தவர்களின் உரிமைகளுக்கான உதவிகரம் நீட்டுவது குறிப்பாக கிறிஸ்துவ மற்றும் முஸ்லீம் மத சிறுபான்மையினர்களுக்காக அரசு துறையை அனுகுவது. 10.04.2021 அன்று காமராஜநகர் ஆவடி பகுதியில்தொற்றுநோய் காலத்தில் வேலை இழந்த புலம் பெயர்ந்தோர்க்கு அவர்களின் திறமைக்கு ஏற்ப பல்வேறு திறன் பயிற்சி, ஸ்ரீ கிருஷ்ணா கட்டுமான உபகரணங்கள் வாடகை மற்றும் குத்தகைக்கு கோவர்த்தனகிரி ஆவடிஒருங்கிணைப்பாளர் திரு பாஸ்கர் அவர்களால் 10 நாட்களுக்கு 40நபர்களுக்கு டாசோஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலின் படி பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் 17.03.2022 அன்று புலம் பெயர்ந்தோர்க்கான பயிற்சி திட்டங்கள் தொடங்குவதற்கு ஈஸ்வரன் நகரில் உள்ள கிராம சங்க பிரதிநிதிகளுடன் இணைந்து இப்பயிற்சி அளிக்க திட்டமிடபட்டது.

## 31. சமூக பாதுகாப்பு திட்டம்

மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களின் பாதுகாப்பிற்கு ஒரு சிறு தொகையை ஒதுக்கி நுண்காப்பீடு திட்டத்தில் சேர்ந்துள்ளனர். 2021-ம் ஆண்டு 581 உறுப்பினர்கள் இக்காப்பீடு திட்டத்தில் தங்களை புதுப்பித்துக் கொண்டனர். இதே ஆண்டு இவர்களில் 11 உறுப்பினர்கள் இயற்கை எய்தியுள்ளனர். இவர்களுக்கான இழப்பு காப்பீடு தொகை ரூ.1,88,083/- அவர்களின் குடும்ப வாரிசுகளுக்கு அளிக்கப்பட்டது.

## 32. பீமன் தோப்பு - இயற்கை வேளாண்மை மாதிரி பண்ணை

சென்னை சமூக சேவை சங்கத்தின் இயற்கை வேளாண்மை மாதிரி பண்ணை அமைப்பதற்கு 13 1/4 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் மா, கொய்யா, தேக்கு, தென்னை, வேம்பு, நெல்லி, செடிகள் வளர்க்கப்பட்டு வருகின்றது. இந்நிலத்தில் இயற்கை பயிர் செய்வதற்கும் மரம் வளர்ப்பதற்கும் அரசு தோட்டக்கலைத்துறை, வனத்துறை இவர்களோடு இணைந்து பராமரித்து வருகின்றோம். இதில் வருகின்ற வருவாய் சென்னை சமூக சேவை சங்கத்திற்கு நல திட்டங்கள் அளித்திட உதவும்.


Madras Social Service Society
FEEDING INDIA


SERVITE CONVENT


EMERGENCY RELIEF


EMERGENCY RELIEF


COVID 19
SECOND WAVE RESPONSE
Chief Guest
Ma.Subramanian
COVID-19
SECOND WAVE
RESPONSE
Caritas India
Siemens Caring Hands
Government of Tamilnadu
HANDING OVER OF
VENTILATORS
Caritas
Siemens Caring Hands
MEDICAL KIT





















# சென்னை சமூக சேவை சங்கம் சார்பில் பழங்குடியினர் 600 பேருக்கு நலத்திட்ட உதவி

கும்மிடிப்பூண்டி,டிச.07–

சென்னை சமூக சேவை சங்கத்தின் சார்பில் கும்மிடிப்பூண்டி அடுத்த பாதிரிவேடுபகுதியில் பல்வேறு கிராமங்களை சேர்ந்த 600 பழங்குடியினர் குடும்பத்திற்கு மழைக்காலநிவாரணஉதவிகள் வழங்கப்பட்டது.

சென்னைசமூகசேவை சங்கத்தின் இயக்குனர் பாதிரியார் எம்.வி.ஜேக்கப் தலைமையில்நடைபெற்றஇந்த நிகழ்வில்பாதிரிவேடுஊராட்சி மன்றதலைவர்என்.டி.மூர்த்தி, மாநெல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் லாரன்ஸ், பாதிரிவேடு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ஈஸ்வரி பாலசுப்ரமணியம், ஒன்றிய கவுன்சிலர்கள் சிட்டிபாபு சிவா,மாதர்பாக்கம்இந்தியன் ஓவர்சீஸ்வங்கிஉதவிமேலாளர் ரமேஷ்முன்னிலைவகித்தனர்.

இந்தநிகழ்வில்டி.ஜெ.எஸ் கல்வி குழும இயக்குனர் டி.ஜெ.ஜி. தமிழரசன் சிறப்பு அழைப்பாளராகபங்கேற்றார்.

தொடர்ந்து நிகழ்வில் பாதிரிவேடு,மாதர்பாக்கம், போந்தவாக்கம், கண்ணம்பாக்கம் சாணாபுத்தூர், பூவலை உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச்சேர்ந்த600 பழங்குடி இன குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரண உதவியாக அரிசி, மளிகை பொருட்கள்,போர்வை,பாய் உள்ளிட்டவைகள்சென்னை சமூக சேவை சங்கத்தின் சார்பில் டி.ஜெ.எஸ் கல்வி குழும இயக்குனர் டி.ஜெ.ஜி. தமிழரசன் வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது சென்னை சமூக சேவை சங்கத்தின் மூலம் பழங்குடியினருக்குகரோனா தடுப்பூசிபோட்டுக்கொள்ள வேண்டியதன் அவசியம்குறித்து வலியுறுத்தப்பட்டதோடு, பொதுமக்கள் கட்டாயம் வீட்டை விட்டு வெளியே செல்லும்போது முககவசம் அணிந்து செல்லவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

மேலும் சென்னை சமூக சேவை சங்கத்தின் மூலம் விரைவில் பழங்குடியின மக்களை ஒருங்கிணைத்து அவர்களுக்குசிறப்புமருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட உள்ளதுஎன்றும்தெரிவித்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சென்னை சமூக சேவை சங்கத்தின் முதன்மைஒருங்கிணைப்பாளர் ஜெயசீலன், ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் இயேசு ராஜா, பகுதி ஒருங்கிணைப்பாளர்கள் டி.எஸ்.கவிதா, ஷோபா, கூட்டமைப்பு தலைவிகள் ஜெயமாலை, சுந்தரம்மாள் உள்ளிட்டோர் முன்னின்று சிறப்பாக நடத்தினர்.




MADRAS SOCIAL SERVICE SOCIETY


MADRAS SOCIAL SERVICE SOCIETY


MADRAS SOCIAL SERVICE SOCIETY
KOLPING CHENNAI
TRAINING PROGRAMME






டிபன் சென்டர்


MIDS







மகளிர் தின விழா - 20


மகளிர் தினவிழா - 2022
MADRAS SOCIAL SERVICE SOCIETY
KOLPING PROGRAMME




சென்னை சமூக சேவை சங்கம்
சென்னை & திருவள்ளூர் மாவட்ட பெண்கள் கூட்டமைப்பு
மகளிர் தினவிழா - 2022


சென்னை சமூக சேவை சங்கம்
சென்னை & திருவள்ளூர் மாவட்ட பெண்கள் கூட்டமைப்பு
மகளிர் தினவிழா - 2022
MSSS